# மகிழ்ச்சி

**MAGIZHCHI MAGAZINE**

**SEPTEMBER 2025**





## C.S.I. TAMIL CHURCH SHARJAH

The United Arab Emirates,

Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com



For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 7 |
| திருமறை தியானம் | 9 |
| People of God: The Flock of Christ | 12 |
| இனிய இல்லறம் | 14 |
| Church History | 17 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 20 |
| Kids Corner | 21 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 23 |
| Daily Bible Reading | 25 |
| ஆராதனை தியானப் பொருள் | 26 |



# From the Presbyters Desk

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த இறைமக்களே,

உங்கள் யாவரையும் நமது விடுதலையாளர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரிலே அன்புடன் வாழ்த்துகின்றேன்.

நமது “மகிழ்ச்சி” என்னும் இந்த மாதந்திர திருச்சபை நூல் வழியாய் உங்களுடன் தொடர்பு கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் இறைவர் நம்மைக் கண்ணின் மணியைப் போல பாதுகாத்து இந்த செப்டம்பர் மாதத்தைக் காண செய்திருக்கிறார் அவருக்கு நம் உள்ளத்தில் இருந்து நன்றிகளை உரித்தாக்குவோம். நம்மில் சிலர் ஜுலை, ஆகஸ்ட் ஆகிய இரண்டு மாதங்கள் இந்திய தேசத்திற்குச் சென்று தங்களுடைய சொந்த ஊர்களில் தங்களுடைய குடும்பத்தோடு விடுமுறை நாள்களைக் கொண்டாடி மீண்டும் திரும்பி இருக்கிறீர்கள் உங்கள் பயணங்களில் ஆண்டவருடைய அருள் இருந்ததுக்காகவும் உங்களுடைய விடுமுறை நாட்கள் மிகச் சிறப்பாக அமைந்ததற்காகவும் எண்ணி கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றேன். இந்த செப்டம்பர் மாதத்தில் மீண்டும் இந்த ஐக்கியத்தில் இணைந்திருக்கிற உங்களை அன்புடன் வாழ்த்துகின்றேன்.

இந்த இரண்டு மாதங்கள் நம்முடைய திருச்சபையை ஆண்டவர் மிகச் சிறப்பாக வழிநடத்திச் சென்றுள்ளார். நம்முடைய திருச்சபையில் பல வளர்ச்சிகளையும், மாற்றங்களையும் கொண்டு வர கடவுள் நமக்கு உதவி செய்துள்ளார் குறிப்பாக கடந்த மாதத்திலிருந்து மாதம் முதல் நாள் வாக்குதத்த ஆராதனையை 'கூகுள் மீட்' வழியாக நடத்த முயற்சி எடுத்தோம் அதேபோல் கடந்த மாதம் முதல் நாள் காலை ஐந்து மணி முதல் ஐந்து முப்பது மணி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது பலர் தங்கள் குடும்பத்தோடு கலந்து கொண்டீர்கள், இந்த முயற்சி மிக ஆசீர்வாதமாக அமைந்துள்ளதாக பின்னூட்டம் பெற்றுள்ளோம் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இதை நடத்த முடிவெடுத்து உள்ளோம். நம்முடைய திருச்சபையின் வழிபாட்டு நேரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை சரியாக 5.30 மணிக்கு வழிபாடு தொடாங்கும்,மேலும் புதிய இறைமக்கள் திருச்சபைக்கு வர தொடங்கியுள்ளார்கள். கடந்த விடுமுறை நாள்களில் நம்முடைய திருச்சபை நிரம்பி வழிவதை கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றோம், இதைக் கருத்தில் கொண்டு இரண்டாம் ஆராதனையை ஆரம்பிக்க முயற்சிகளை எடுத்து வருகின்றோம் அதற்கான நேரத்தை ஆய்வு செய்து கண்டறிவதற்கு 'கூகுள் பார்ம்' ஒன்றை ஒழுங்கு செய்து பகிர்ந்துள்ளோம் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் கலந்து ஆலோசித்து இரண்டாம் ஆராதனை எப்போது வைக்கலாம் என்பதைக் குறித்து அதில் தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கிறிஸ்துவுக்குள் அன்புக்குரியோரே கடந்த ஆகஸ்ட் மாதம் மிகச் சிறப்பாக நம்முடைய வழிபாடுகளை நடத்த கர்த்தர் நமக்கு உதவி செய்தார் முதல் வாரத்தை நாம் நற்செய்தி வாரமாக அனுசரித்தோம். அந்த நாளில் ஒவ்வொரு இறை குடும்பமும் தங்களுடைய சொந்த பகுதியில் உள்ள ஒரு மிஷனரி குறித்து தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து அவர்கள் அதைக் குறித்து ஒரு பக்க அளவில் ஒரு கட்டரை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டேன் அதன்படி நமது திருச்சபையை சார்ந்த 13 குழந்தைகள் தங்களது கட்டுரையைச் சமர்ப்பித்திற்காக அவர்களே அதிகமாக வாழ்த்துகின்றேன் அவர்களை உற்சாகப்படுத்திய பெற்றோர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே போன்று கடந்த ஆகஸ்ட் மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை நாம் திருமண ஞாயிறாக சிறப்பாக கைக்கொண்டோம் அந்த நாளில் திருமணத்தின் சிறப்பை குறித்தும் திருமணத்தின் அடிப்படை குறித்தும் அருளுரையில் தியானித்தோம் நிறைவில் நமது திருச்சபையில் உள்ள தம்பதியர்களை முன்பாக அழைத்து தங்கள் திருமண நாளில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை மறு ஒப்படைப்பு செய்யவும் அதில் கலந்து கொண்ட தம்பதிகள் தங்களுடைய அன்பை வெளிப்படுத்து வகையில் ரோஜா மலரைக் கொடுத்து வாழ்த்தி கொண்டனர். மேலும் மற்ற வாரங்களில் திருமுழுக்கு, திருவிருந்து குறித்தும் சாக்கிரமந்து, கோட்பாடுகளைக் குறித்தும் ஆழ்ந்து சிந்தித்தோம்.

நம்முடைய மாதந்திர நிகழ்வுகள் முதல் வெள்ளி 24 மணி நேர தொடர் சங்கிலி ஜெபம் சிறப்பாக நடைபெற்றது. அதேபோல இரண்டாம் வெள்ளி மாலை நடைபெறும் முன் இரவு ஜெபம் மிகச் சிறப்பாக நடைபெற்றது கடந்த இரண்டு மாதங்களாக “குல மூதுவர்களை” குறித்துச் சிந்தித்து வருகின்றோம் அதில் ஈசாக்கு வாழ்க்கையில் ஆண்டவர் கொடுத்த ‘ரெக்கபோத்தை’ குறித்தும் மற்ற ஆசிர்வாதங்களைக் குறித்தும் சிந்தித்தோம், இரண்டாவது சனிக்கிழமை நடைபெறும் உபவாச ஜெபம் மிகச் சிறப்பாக நடைபெற்றது அதில் “வனாந்தரத்தின் வழித்தடம்” என்கின்ற தலைப்பின் கீழ் திருமறையில் மக்கள் வாழ்வில் வனாந்தரம் எப்படிப்பட்ட பயிற்சிகளையும் ஆசீர்வாதங்களையும் கொண்டு வந்தது என்பது குறித்துச் சிந்தித்து வருகின்றோம் அதில் கடந்த மாதத்தில் மோசயைத் தொடர்ந்து இஸ்ரவேல் மக்கள் வாழ்வில் வனாந்தரத்தின் வழியாகப் பெற்றுக்கொண்ட படிப்பினைகளையும் பட்டறிவுகளையும் குறித்துச் சிந்தித்தோம். ஒவ்வொரு வியாழக்கிழமையும் முகாமில் உள்ள சகோதரர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடவும் அவர்களுக்கான ஆற்றுப் பணியைச் செய்யவும் இறைவன் உதவிபுரிந்தார். இந்தத் திருப்பணியில் இணைத்துக் கொண்ட ஒவ்வொருவருக்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

மேலும் கடந்த மாதத்தில் 16 குடும்பங்களை இல்ல சந்திப்பு வழியாக சந்திக்க கடவுள் உதவி செய்தார் எங்களைக் குடும்பமாய் அழைத்து தங்கள் குடும்பத்தவருக்காக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டு ஒவ்வொருவருக்கும்

நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்து இந்த மாதத்தில் தங்கள் இல்லங்களைச் சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். இந்த மாதம் இரண்டாம் ஞாயற்றுகிழமை முதல் நம்முடைய ஞாயிறு பள்ளி தொடங்க உள்ளது அதன் புதிய பொறுப்பாளரையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் அவர்களை உற்சாகப்படுத்தி அனுப்புகின்ற பெற்றோரையும் வாழ்த்துகின்றேன். “Reflecting Jesus” என்கிற தலைப்பின் கீழே இந்த ஆண்டு ஞாயிறு பள்ளி நடைபெற உள்ளது என்பதையும் ஒவ்வொரு மாதமும் ஆசிரியர்களுக்கு ‘Google Meet’ வழியாக பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறைவாக நம்முடைய திருச்சபையின் முகநூல் (Facebook), youtube சேனல் மற்றும் Whatsapp ஆகிய சோசியல் மீடியா புத்தாக்கம் பெற்றுள்ளது வாரந்தோறும் அருளுரைகள் நம்முடைய நிகழ்வுகளின் நினைவூட்டல் ஆகியவற்றைப் பகிர்கின்றோம் இறை மக்கள் அதன் வழியாக செய்திகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன், அதற்கான லிவீஸீளீ பின்வருமாறு

Youtube Channel : CSI Tamil Church Sharjah UCLb5yH8jtTcJZgHpX5BNX3g

Facebook : CSI Tamil Church Sharjah <https://www.facebook.com/share/1Bxmt1yCce/?mibextid=wwXIfr>

தங்களையும், தங்களின் குடும்பத்தையும் வேலை செய்யும் இடங்களில் ஆண்டவர் இன்னும் அதிகமாக ஆசீர்வதிப்பாராக என்று அன்புடன் வாழ்த்துகின்றேன்.

இறைபணியில் உங்கள் ஆயர்
அருள்திரு. A.F.ஆமோஸ் இலாசரஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com

# செயலர் மடல்



பிரியமானவர்களே உங்கள் அனைவருக்கும் ஆண்டவரே இயேசு கிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு மாதங்கள் விடுமுறை காலங்களில் தாயகத்திற்கு சுகமாக சென்று திரும்பிய சபையின் மக்களுக்காக ஆண்டவரை துதிக்கிறேன். கடந்த இரண்டு மாதங்களாக சபையில் நடந்த அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு பெற்ற சபையாருக்கு நன்றி செலுத்துகிறோம்.

கடந்த வாரம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி, ஆராதனைக்கு பின் தங்கி சென்ற நமது பெண்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

வருகிற செப்டம்பர் மாதம் இரண்டாம் வாரம், பெண்கள் ஞாயிறாக ஆசரிக்க தீர்மானித்துள்ளோம். அன்றைய ஆராதனையை நமது பெண்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் நடத்துவார்கள், நமது ஆயர் அவர்கள் தேவ செய்தி அளிப்பார்கள். அதற்கான பாடகர் பயிற்சி மற்றும் குறு நாடக பயிற்சி இன்றைய ஆலய ஆராதனைக்கு பின் இதே St.Paul's sanctuary இல் வைத்து நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோ

கடந்த வருடங்களில் நமது சபையின் Junior church director ராக சிறப்பாக பணிபுரிந்த திருமதி Adeline solomon அவர்களுக்கு சபையின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அதை தொடர்ந்து அடுத்த இரண்டாவது டைரக்டர் பதவி ஏற்றுள்ள திருமதி. Priya david paul அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தி வரவேற்கிறோம். அவர்களுடைய பணி சிறக்க ஆண்டவரிடத்தில் வேண்டிக் கொள்கிறோம். தொடர்ந்து அவர்களுக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் தங்களால் இயன்ற உதவிகளை செய்து அவர்களுடைய பணிசிறக்க செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். இதை தொடர்ந்து கடந்த ஆண்டுகளில் Junior church ஆசிரியர்களாக பணிபுரிந்த ஒன்பது ஆசிரியர்கள் இந்த ஆண்டு தொடரை இயலவில்லை. அவர்கள் செய்த ஊழியத்திற்காக அவர்களுக்கு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டவர் அவர்களை தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக சமயம் வாய்க்கும் பட்சத்தில் அவர்கள் திரும்பி இந்த ஊழியத்திற்கு வருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து இந்த ஊழியத்தில் செயல்படும் ஆசிரியர்களுக்காக ஆண்டவரே துதிக்கிறேன், ஆண்டவர் தாமே அவர்களை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக.

நமது Junior church சில் புதிய கல்வி ஆண்டுக்கான, வகுப்புகள் செப்டம்பர் இரண்டாம் வாரம் முதல் தொடங்கவிருக்கிறது. புதிதாக, இந்த ஆண்டு முதல், தங்கள் குழந்தைகளை JCக்கு அனுப்ப விளையும் பெற்றோர்கள், JC Director திருமதி. Priya David அவர்களை அணுகுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

இனி வரும் நாட்களில, கடந்த AGM மில் அறிவுறுத்தியபடி, நமது பிள்ளைகள் அனைவரும் ஆலய ஆராதனைகளில் பங்கேற்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் விதமாக, மாதத்தின் முதல் வாரங்களில், நமது பிள்ளைகள் அனைவரும் முழு ஆராதனையிலும் பங்கேற்கும் விதமாக அன்றைய தினம் முழுவதும் ஜுனியர் சர்ச் நடைபெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அதைத்தொடர்ந்து இரண்டாம் மூன்றாம் வாரங்களில், Preparatory, Beginner, Primary & Junior வகுப்பு பிள்ளைகள் அறிவிப்பைத் தொடர்ந்தும். inter, senior & Super senior வகுப்பு பிள்ளைகள் காணிக்கை செலுத்திய பின்பும், நான்காம் மற்றும் ஐந்தாம் வாரங்களில் அனைத்து பிள்ளைகளும், அறிவிப்பை தொடர்ந்தும், தங்களது ஜுனியர் சர்ச் வகுப்புகளுக்கு செல்வார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் .

பிரியமானவர்களே, நமது Harvest festival 2025 நெருங்கிவிட்டது. இதற்காக சபையார் ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

பிரியமானவர்களே, கடந்த சில மாதங்களாக அறிவிக்கப்பட்டபடி. இதுவரை நமது சபையர், மூன்று Google படிவங்களை, பூர்த்தி செய்து அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறீர்கள்.

அவற்றின் முதல் படிவம், நமது குடும்பத்திற்கு தேவையான, ஆலய ஆராதனையில் உபயோகிக்கும், பாமாலை கீர்த்தனை புத்தகங்கள், ஆலைய ஆராதனை ஒழுங்குமுறை புத்தகங்களின் எண்ணிக்கைய, தெரிவிக்கும் படிவம் ஆகும். இரண்டாவது படிவம், நமது சபையில் இரண்டாவது வாராந்திர ஆலய ஆராதனை தேவைப்படும் பட்சத்தில, தங்கள் குடும்பத்திற்கு வசதியான, நாள் மற்றும். நேரத்தை தெரிவிக்கும் படிவம் ஆகும். இதுவரை மேற்கூறிய இரண்டு படிவங்களையும், தலா 39 மற்றும் 69 சபையினர் பூர்த்தி செய்து அனுப்பி உள்ளார்கள். நமத சபையின் தகவல் தரவுகளில் நமது சபையினரின் பிறந்தநாள் மற்றும் திருமணநாட்கள், அவர்கள் தொடர்புக்கான எண்கள், வீட்டு விலாசம் போன்ற விவரங்கள் சேகரித்து சேர்ப்பதற்கான படிவம் இதுவரை இந்த மூன்றும் பூர்த்தி செய்யாதவர்கள் அனைவரும் குறிப்பாக தாயகம் சென்று திரும்பிய சபையினரும், கூடிய விரைவில், பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.



# ஆற்றல்படுத்தும் அன்பர்

அன்புக்குரியோரே,

இந்த ஆண்டின் கடந்த எட்டு மாதங்களாக இறைவர் நம்மைப் பாதுகாத்து அற்புதமாக நடத்தி வந்திருக்கிறார்.

ஆண்டவருக்கே மாட்சி உரித்தாகுக!

இந்த மாதத்தில் ஆண்டவர் எனக்கு என்ன வாக்குதத்தம் வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள நீங்கள் ஆவலோடு காத்துக் கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நமக்காக, நம்முடைய திருச்சபைக்காக ஆண்டவர் தந்திருக்கிற வாக்குதத்தம் நியாயாதிபதிகள் ஆறாம் அதிகாரம் 14-ஆம் வசனம்

“அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்.”

அன்பார்ந்தவர்களே, கிதியனைப் பார்த்து உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடு போ என்று சொன்ன ஆண்டவர் இந்த மாதத்திலும் நம்மைப் பார்த்து அதே வார்த்தையைச் சொல்லுகிறார் ‘உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடு போ உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா’. கிறிஸ்துவுக்குள்



அன்பார்ந்தவர்களே நம் எல்லோரும் கிதியினுடைய வாழ்வை நன்கு அறிந்திருக்கிறோம்.

நியாயாதிபதிகள் ஆறாம் அதிகாரம் 11-ஆம் வசனம் கிதியோன் மீதியானியர்களுக்கு பயந்து திராட்சைரச ஆலையில் கோதுமையை அடிப்பதற்காக தம்மை ஒளித்துக் கொள்வதைக் கூறுகின்றது மீதியானியர்களுக்கு பயப்படும் கிதியோனை கர்த்தர் எப்படியாக அழைக்கிறார் என்பதைப் பனிரெண்டாம் வசனத்திலே நாம் பார்க்கிறோம், 'கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்குத் தரிசனமாகி பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடு இருக்கிறார்' என்றார். இந்த உலகம் கிதியோனைக் கோழையாக மறைந்து வாழ்பவனாக பார்த்திருக்கும் ஆனால் ஆண்டவரோ கிதியோனை பராக்கிரமசாலியாக பார்க்கிறார். நம்மை மற்றவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பது நம்முடைய கவலையாக இருக்கக்கூடியது ஆண்டவர் நம்மை எப்படிப் பார்க்கிறார் என்பதுதான் முக்கியம். நம் எல்லோரும் Bumble Bee என சொல்லப்படும் வண்டுத் தேனியை பாத்திருப்போம் அதனுடைய உருவம் பெரிதாய் இருக்கும் ஆனால் இறக்கைகள் மிகச் சிறியதாய் இருக்கும். Aerodynamics என சொல்லப்படும். காற்றியக்கவியல் என்ன சொல்கிறது என்றால் இந்த வண்டுத் தேனி கொண்டுள்ள இறக்கைகளால் கண்டிப்பாக அதனால் பறக்க முடியாது ஏனென்றால் அந்தக் காற்றியக்கவியல் கோட்பாட்டிற்கு இந்த இறக்கையும் அதன் உடலின் வடிவமும் ஏற்புடையதாக இல்லாத காரணத்தால் அவற்றால் பறக்க முடியாது என்கிறது அறிவியல். பாவம் அந்த Bumble Bee க்கு இந்த Aerodynamics தெரியாது, அதைக் குறித்து அதற்குக் கவலையும் இல்லை, ஆண்டவர் தனக்கு இறக்கைகளை கொடுத்திருக்கார் அதைப் பறப்பதற்கு என்ற நம்பிய அந்த வண்டு இன்றைக்கும் பறந்து கொண்டிருக்கிறது. இந்த உலகமோ, உலகத்தில் உள்ள சிலரோ நம்மைக் குறித்து என்ன நினைப்புகளை, என்ன எண்ணங்களை வைத்திருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல கடவுள் நம்மைக் குறித்து என்ன நினைத்திருக்கிறார் என்பது தான் முக்கியம். கிதியோனை கடவுள் பராக்கிரமசாலியாகப் பார்க்கிறார் அது மட்டுமல்ல அவர் யாரைப் பார்த்து பயந்தாரோ அவர்களை எதிர்க்க கர்த்தர் கிதியோனை அனுப்புகிறார். அனுப்பும்போது கர்த்தர் இந்த வாக்குதத்தை கொடுக்கிறார்,

"உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை

மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்."

தொடர்ந்து நியாயாதிபதிகள் ஏழாம் அதிகாரம் மூன்றாம் வசனத்தில் கிதியோனிடத்தில் 32,000 வீரர்கள் இருந்தபோதிலும் மீதியானியர்களை போரில் வெல்லுவதற்கு வெறும் 300 பேரைக் கொண்டு கிதியோன் புறப்பட்டுப் போகிறார், காரணம் கர்த்தர் கிதியானுக்கு கொடுத்த அந்த வாக்குதத்தம், நீயாதிபதிகள் ஆறாம் அதிகாரத்தில் பதினாறாம் வசனம் "நான் உன்னோடு கூட இருப்பேன். ஒரு மனுஷனை முறியடிப்பது போல் நீ மீதியானியரை முறியடிப்பாய் என்றார்" அப்படியென்றால் கிதியோன் தம்முடைய படை பலத்தால் அல்ல தமது விசுவாசத்தின் பலத்தால் மீதியானியர்களை முறியடிக்க வேண்டும் என்பதுதான் ஆண்டவருடைய சித்தம்.

நம்முடைய சூழ்நிலை எதுவாக இருந்தாலும் ஆண்டவர் இயேசு நம்முடன் இருக்கிறார் அவர் நம்மைப் பலப்படுத்த வல்லவராக இருக்கிறார் கிதியோனை பராக்கிரமசாலியாக பார்த்த ஆண்டவர், உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடு போ என்று சொன்ன ஆண்டவர் கிதியோனை ஒரு மிகப் பெரிய பலத்தோடு இருக்கக்கூடிய நாட்டை முறியடிக்கச் செய்தார். இன்றைக்கும் ஆண்டவர் நம் வழியாக பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராய் இருக்கிறார் இந்த உலகம் நம்மை அறிவு அற்றவர்களாக, ஞானம் அற்றவர்களாக, பலம் அற்றவர்களாக அதிகாரமற்றவர்களாக பார்க்கலாம் ஆனால் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலிப்பியர் 4:13 இன் வார்த்தைக்கு ஏற்ப எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லா நிலைகளிலும் நம்மைப் பலப்படுத்த, ஆற்றல் படுத்த நமது அன்பரால் முடியும் அந்த விசுவாசத்தோடு, அந்த நம்பிக்கையோடு இந்த மாதத்தை தொடங்குவோம்,

அழைத்தவர் உண்மையுள்ளவர்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# THE LORD WHO EMPOWERS

Judges 6:14- The LORD turned to him and said, "Go in the strength you have and save Israel out of Midian's hand. Am I not sending you?"

The story of Gideon in Judges 6 reminds us of a timeless truth: God does not call the qualified, He qualifies the called. When the angel of the Lord appeared to Gideon he was threshing wheat in secret hiding from his enemies filled with fear and doubt. In this context we can never think that he is a person who can lead Israel and not only lead them but lead them to victory. This is a clear indication that God definitely looked beyond Gideon's weakness and declared him a mighty warrior.

The verse clearly defines that God sees beyond our limitations, God uses what we have and Gods presence is a power.

Gideon saw himself as small and incapable. But God saw the potential He had already placed within Gideon. The Lord did not ask Gideon to become someone else. He simply called him to use the strength he already had. Often, we underestimate what God has deposited in us. We focus on what we lack, but He sees what He can do through us.

The Lord did not ask Gideon to be someone else; He asked him to use the strength he already possessed. God's call does not always require

something extraordinary it requires obedience with what we already carry. Our skills, experiences, and even our struggles can be used as tools in God's hand.

Trust in the LORD with all your heart and lean not on your own understanding;

in all your ways submit to him, and he will make your paths straight Proverbs 3:5-6

Therefore, we do not have to worry or doubt our Almighty God who is always planning everything ahead for us, has a purpose for all that is happening in our lives and asks us to Trust that His presence is there with us always. Joshua 1:9 - "Have I not commanded you? Be strong and courageous. Do not be afraid; do not be discouraged, for the Lord your God will be with you wherever you go."

Like Gideon, we may feel unworthy, weak, or inadequate in the face of challenges. Yet the Lord who empowered Gideon is the same Lord who empowers us. He calls us to step forward in faith trusting not in our strength but in His.

Whenever you feel weak or afraid, remember Judges 6:14: "Go in the strength you have… Am I not sending you?" The God who sends is the God who sustains. The God who calls is the God who equips. Truly, He is the Lord who empowers.

Contributed by
Mrs.Nancy Augustine



# பெற்றோருக்குச் சில ஆலோசனைகள்

**பிதாக்களே, ...கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை** (உங்கள் பிள்ளைகளை) **வளர்ப்பீர்களாக.** (எபேசியர் 6:4).

## 5. நல்லவைகளைக் கற்றுக்கொடுங்கள்

நல்லவைகள் என்னென்ன, கெட்டவைகள் என்னென்ன என்பதைச் சிறு வயது முதலே கற்றுக்கொடுங்கள். நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொடுங்கள். பிறர் முன்னால் எப்படி மரியாதையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்றும், சாப்பிடும் பொழுது எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்றும், பணத்தின் அருமை என்னவென்றும் பிள்ளைகளுக்குச் சிறு வயது முதலே கற்றுக்கொடுங்கள்.

இவைகளை எடுத்துக்காட்டுகளாகத்தான் கூறுகிறேன். நல்ல பழக்கவழக்கங்கள் என்னென்ன என்பது உங்களுக்கே தெரியும்.

## 6.கண்டித்து வளர்த்திடுங்கள் பாராட்டி வளர்த்திடுங்கள்

பிள்ளைகள் பிள்ளைகளைக் கண்டித்து வளர்த்திடுங்கள். திருந்துவதற்காக அல்லது தவறை உணர்த்துவதற்காக அன்புடன் தண்டியுங்கள். உங்கள் கோபத்திற்கு வடிகாலாகவோ அல்லது உங்களுடைய இயலாமையையின் வெளிப்பாடாகவோ உங்கள் தண்டனை இல்லாதிருக்கக் கவனமாக இருங்கள்.

பிள்ளைகள் சிறப்பாக ஏதாவது செய்தால் மனமுவந்து பாராட்டுங்கள். (At times of achievements, reward them to apprieciate, but not exceeding the limit). கனம் வந்துவிடாதபடி நடந்து கொள்ளுங்கள்.

பிள்ளைகளுக்குக் கீழ்ப்படியக் கற்றுக் கொடுங்கள். கீழ்படியாமையை அனுமதித்தால், அது அவர்கள் வாழ்க்கையைப் பின்னால் நரகமாகிவிடும். பெரியவர்களான பின்பும் இந்தக் குணம் தொடர்ந்தால், எல்லா இடத்திலும் அவர்கள் பிரச்சனைக்குரிய நபராக இருப்பார்கள். வீட்டிலும், வெளியிலும், அலுவலகத்திலும் கீழ்ப்படியாதவராக இருப்பார்கள். அடியாத 'மாடு பணியாது' என்ற முறையை மற்றவர்கள் கையாண்டுதான் இவர்களை அடக்க வேண்டியது வரும்.

கீழ்ப்படியாமையைத் தொடர்கிறவர்கள் திருந்தாவிட்டால், வாழ்க்கையில் முன்னேறுவது கடினமாக இருக்கும். பெரியோர்களுக்கும். நாட்டுச் சட்டத்திற்கும், ஆவிக்குரிய சட்டங்களுக்கும் கீழ்ப்படியக் கற்றுக்கொடுங்கள்.

## 7. மன்னிக்கக் கற்றுக்கொடுங்கள்

மன்னிக்க இயலாதவர்களால் இவ்வுலகில் மகிழ்ச்சியாக இருக்க இயலாது. மன்னிப்பது கிறிஸ்தவக் கடமை. 'நாம் மன்னித்தால்தான். ஆண்டவரும் நமக்கு மன்னிப்பார்' என்று கர்த்தருடைய ஜெபம் கற்பிக்கிறது.

குடும்பம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு மன்னிப்பு அவசியம் ராபர்ட் க்விலான் என்ற அறிஞர், "மகிழ்ச்சியான திருமணம் என்பது நன்கு மன்னிக்கும் இருவரின் இணைதல்" என்று கூறுகிறார் (A happy marriage is the union of two good forgivers -Robert Quillan). கணவனும் மனைவியும் மன்னிக்கிறவர்களாக இருந்தால்தான் இல்லறம் நல்லறமாக இருக்கும். உங்கள் பிள்ளைகளுக்கு மன்னிப்பின் மகத்துவத்தைக் கற்றுக்கொடுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் மன்னிக்கும் குணத்தின் அவசியத்தை அறிந்து கொள்வார்கள்.

மன்னிப்பில். மன்னிப்பு பெறுகிறவர்களைவிட மன்னிப்பை வழங்குகிறவர்கள்தான் அதிக நன்மை பெறுகிறார்கள். மன்னிப்பதினால் மன்னிப்பவரின் மன அழுத்தம் குறைகிறது, பழியுணர்வு அகலுகிறது ஆண்டவரின் கட்டளை நிறைவேற்றப்படுகிறது.

## 8. இயேசுவை அறிமுகப்படுத்துங்கள்

தீவிரவாத அமைப்புகளும், இயக்கங்களும், தங்களுக்கு ஆள்சேர்க்க, குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்குமே கண்ணி வைக்கிறார்கள். அவர்களுடைய Slogan: "Catch them young." "இளமையிலேயே (உன் பக்கம்) இழுத்துக்கொள்" என்பதுதான் அதன் பொருள். கிறிஸ்தவர்களும் அதே யுக்தியைப் பின்பற்றினால் தவறில்லை. "பிள்ளையை நடக்கவேண்டிய வழியிலே நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி.22:6) என்று சாலமோன் ஞானி கூறுகிறார்.

பெரும்பாலும் மனிதனின் எண்ணங்கள்தான் அவனை நல்ல பாதைக்கோ அல்லது தவறான பாதைக்கோ இட்டுச் செல்கின்றன. கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படியும் சிந்தனையைப் பிள்ளைகளிடம் வளரச் செய்தால்தான் அவர்களுடைய செயல்கள் அவர்கள் வளர்ந்த பின்பும் செம்மையாக இருக்கும்; செம்மையான பாதையில் செல்வார்கள்.

இயேசுவைப்பற்றி உங்கள் பிள்ளைகளுக்கு இளமையிலிருந்தே கற்றுக்கொடுங்கள்; இயேசுவை இளமையிலேயே அறிமுகப்படுத் துங்கள்.

இயேசுவைத் தங்களுடைய வாழ்க்கையில் இரட்சகராக ஏற்கச் செய்யுங்கள். எந்த ஒரு பிரச்சனையையும், கிறிஸ்தவ வழியில் சிந்திக்கக் கற்றுக் கொடுங்கள். அதாவது திருமறை காட்டும் பாதையில் சிந்தனைகள் இருக்கட்டும்

## 9. வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக்கொடுங்கள்

வாழ்க்கை ஒரு போர்க் களம். கிறிஸ்தவ வாழ்க்கை எளிதானதல்ல. “என்னிடம் வாருங்கள், நான் ஜெபிக்கிறேன்; உங்கள் கஷ்டங் களெல்லாம் போய்விடும்” என்று யாராவது கூறினால், அவர் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் நம்பாதீர்கள். கிறிஸ்தவனுக்குக் கஷ்டங்கள் கிடையாது என்று திருமறையில் எந்த இடத்திலுமில்லை. இயேசுவே, “உலகில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு” என்றுதான் கூறுகிறார். ஆனால், இயேசு அத்துடன் தனது உபதேசத்தை நிறுத்திவிடவில்லை; அதைத் தொடர்ந்து “ஆனாலும் திடன் கொள்ளுங்கள்” என்று கூறுகிறார். (யோவான் 16:33).

கடினமான கிறிஸ்தவ வாழ்க்கையை எதிர்கொண்டு வாழ்வதற்குக் கிருபையாக அருளப் பட்டுள்ள சக்தியுள்ள அருஞ்சாதனங்கள், திருமறையும், ஜெபமும். திருமறை ஒரு பொக்கிஷம். ஜெபத்தில் நாம் கர்த்தரிடத்தில் பேசுகிறோம்; திருமறை வாயிலாகக் கர்த்தர் நம்மிடம் பேசுகிறார்.

தங்கள் குழந்தைகளுக்கு நடப்பதற்கும், பேசுவதற்கும் எப்படிக் கற்றுக்கொடுக்கிறீர்களோ, அது போலவே குழந்தைகளுக்கு அனுதினமும் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டியது கிறிஸ்தவப் பெற்றோர்களின் கடமையாகும். ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேளுங்கள்: “நான் இன்று செய்கிறதுபோல, உயிரோடிருக்கிறவன், உம்மைத் துதிப்பான்; உயிரோடிருக்கிறவனே தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தைத் தெரிவிப்பான்” (ஏசாயா 38:19)..

நீங்கள் மட்டும் பக்தி வாழ்க்கை வாழ்ந்தால் போதாது. உங்கள் பிள்ளைகளையும் பக்தி வாழ்க்கைக்கு ஏதுவாக வழிநடத்துங்கள்; மீட்பின் அனுபவத்தைப் பெற்றவர்களாக நித்திய வாழ்க்கைக்கு அவர்களையும் தகுதியுள்ளவர்களாக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. “மறுபடியும் வாழ்வதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்க்கப் பெற்றால் என்னுடைய முழு நேரப் பணியையும் சிறு குழந்தைகளைக் கடவுளிடம் திருப்புவதற்கே செலவிடுவேன்” என்று டிவைட். எல் மூடி. ("If I could re-live my life, I would devote my entire ministry to reaching children for God!" Dwight L. Moody)

Church History



# லண்டன் மிஷனெரி சங்கம் (L.M.S)

புலிகள் வாழும் காடுகளிலும், சதுப்புநிலப் பகுதிகளிலும் கால் நடையாகவும் குதிரைச்சவாரி செய்தும் பயணம் செய்தார். அவரது சட்டையும் உருக்குலைந்த தொப்பியும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே பிரசித்தமானவைகள். கிராமங்கள் தோறும் இவர் செல்லும் போது மக்கள் இவரைச் சூழ்ந்துகொள்வார்கள். பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளைக் கண்டால் அவர்களைக் கூடையில் எடுத்துக்கொண்டு வந்து, தமது இல்லத்தில் பாதுகாத்துப் பராமரிப்பார். தப்பி ஓடிவந்துவிட்ட அடிமைகளும், பிச்சைக்காரர்களும், நோயாளிகளும் இவரது குடிசையை நாடி வருவார்கள். வந்தவர்களுக்குத் தஞ்சமளிப்பார். உணவளித்துப் பணிவிடை செய்து சுகப்படுத்திப் புது வாழ்வைத் தொடங்கிட அவர்களுக்கு உதவி செய்வார். இவர் தன்னலம் இல்லாதவர். தன் சுகம் பெரிதென நினையாதவர். இவரது வாழ்க்கை முறையைக் கண்ட இந்துக்களும் இப்புனிதரை “ரிஷி” என்றே அழைத்தனர்.

## உடன் ஊழியர் வேதமாணிக்கம்

ரிங்கல்தோபே முதன் முறையாக மைலாடிக்கு வந்தபோது வேதமாணிக்கத்தின் வீட்டிற்குச் சென்றார். அவர் தாம் தழுவியிருந்த இந்து சமய அடையாளங்கள் அனைத்தையும் தமது இல்லத்தில் அழித்து

விட்டிருந்ததைக் கண்டு வியந்தார். அவரது பற்றுறுதி வளர்ந்தது. அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளக் காரணமாயிருந்தார். ரிங்கல்தோபே. இவரைத் தமது உதவியாளராகவும், நற்செய்திப் பணியாளராகவும் நியமித்துக் கொண்டார். அவர்களால் அநேகர் கிறிஸ்தவர்களாயினர். அநேகர் கிறிஸ்தவர்களாக மாறிவருவதைக் கண்ட பிராமண அதிகாரிகள் இவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினார். ஆங்கிலேயருக்கும், திருவிதாங்கூர் ராஜாவுக்குமிடையே போர் மூண்டபோது கிறிஸ்தவர்கள் அதிகமான துன்பங்களுக்குள்ளாயினர். வேதமாணிக்கமும் அவரது நண்பர்களும் தங்கள் உடைமைகளை மறைத்து வைத்து விட்டு மறைவிடங்களைத் தேடி ஓடினர்; சமாதானம் ஏற்படும் வரை காடுகளில் ஒளிந்திருந்து திரும்பினர். திருவிதாங்கூர் வடபகுதியில் கத்தோலிக்கரும் சிரியன் கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வந்தனர். அவர்களையும் விட்டு வைக்கவில்லை. பல்லாயிரம் பேர் உயிரிழந்தனர்.

மைலாடியில் ஆலயம் ஒன்றைக் கட்ட விரும்பிய வேதமாணிக்கத்திற்கு அதைக் கட்டுவதற்கு உரிய உத்தரவு கிடைக்கவில்லை. பெருந்தொல்லைகட்குப் பிறகே ரிங்கல்தோபேவினால் அனுமதி பெற முடிந்தது. எள் பயிராகியிருந்த தமது நிலத்தை உடனடியாக வேதமாணிக்கம் வழங்கினார். எள் அறுவடைக்குப்பின் கட்டட வேலை தொடங்க நினைத்தார் ரிங்கல்தோபே. ஆனால் வேதமாணிக்கமோ உடனே கட்டட வேலையைத் தொடங்கவேண்டுமென்றார். கிடைத்த அனுமதி ரத்து செய்யப்பட்டுவிட்டால் என்ன செய்வது? பயிர் சாகுபடியைக் காட்டிலும், ஆலயக் கட்டடப் பணியே முக்கியமானது என்று கருதினார். மண்சுவர் எழுப்பப்பட்டு, ஓலைகளால் கூரை வேயப்பட்டு, வழிபாடு நடத்த ஆலயம் ஒன்று உருவாயிற்று. மற்ற பணித்தளங்களிலும் இவ்வாறே ஆலயங்கள் எழும்பின.

## ரிங்கல்தோபே பொறுப்பை ஒப்படைத்தல்

ஆறாண்டு காலம் திருவிதாங்கூரில் ரிங்கல்தோபே கடுமையாய் உழைத்தார். அவரது உடல்நலம் குன்றியது. மலேரியா, ஆஸ்துமா இவரைத் தாக்கின. இதனால் சோர்வடைந்தார். பணியிலிருந்து விலகி,

தென் ஆப்பிரிக்காவிற்கு விடுமுறையில் செல்ல முடிவு செய்தார். செல்வதற்குமுன், இவரும் வேதமாணிக்கமும் பலவிடங்களிலும் சிதறிக்கிடந்த கிராம சபைகளைச் சந்தித்தனர். இறுதியாக அனைவரையும் அழைத்தார். தமது அருளுரையை நிகழ்த்தி, திருவிருந்து வழிபாட்டை நடத்தி முடித்துப் பிரியாவிடை பெற்றார். விடைபெறுமுன், தமது கரங்களை வேதமாணிக்கத்தின் தலைமீது வைத்து, அவரை ஆசீர்வதித்தார். ஆயர் அணியும் தமது மேலங்கியை எடுத்து, வேதமாணிக்கத்திற்கு அணிவித்து, அவரை மிஷன் மேலாளராக அமர்த்தினார். வேதமாணிக்கத்திற்கு அருளுரையாற்றவும், திருவிருந்து வழிபாடுகள் நடத்தவும் அதிகாரம் வழங்கி அதற்கான சான்றிதழையும் வழங்கினார்.

## யாருமறியாக் கல்லறை

ரிங்கல்தோபே மைலாடியிலிருந்து சென்னைக்குச் சென்றார். அவர் அங்குத் தமது இறுதி அருளுரையை L.M.S. புதிய ஆலயத்தில் நிகழ்த்தினார். அப்பொழுதும் அதே பழுதடைந்த தொப்பியை அணிந்திருந்தாரேயன்றி சட்டையின் மீது கோட்டு ஒன்றையும் அணியவில்லை. 1816 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னையை விட்டு இலங்கையை நோக்கிப் பயணமானார். அங்கிருந்து மலேயா சென்றார். லி.வி.ஷி. பொருளாளருக்கு எழுதிய கடிதத்தில், தாம் இந்தோனேஷியா செல்ல திட்டமிட்டிருப்பதாக எழுதியிருந்தார். அதன் பிறகு என்ன ஆனார் என்ற தகவல் ஏதும் கிடைக்கவில்லை. அவர் மலேயாவில் கொல்லப்பட்டார் என்றொரு செய்தி கூறுகிறது. மத்திய ஆப்பிரிக்காவில் கொலை செய்யப்பட்டார் என்பது மற்றொரு செய்தியாகும். ஒருவேளை அவர் கப்பலிலேயே மரணமடைந்து, அவரது உடல் கடலில் எறியப்பட்டிருக்கலாம். திருவிதாங்கூரில் கிறிஸ்துவுக்காய்ப் பணியாற்றிய முன்னோடி மிஷனெரியான ரிங்கல்தோபே எங்கேயோ யாருமறியாக் கல்லறையில் உறங்கிக் கொண்டிருக்கின்றார்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

ஆதியாகமம்

1. யார் மீது ஏழு பழி சுமாரும்?
2. யார் 969?
3. எது தாறுமாறானது?
4. ஊர் விட்டு கானானுக்கு புறப்பட்டவன் யார்?
5. லோத்தையும் அவன் பொருட்களை யார் கொண்டு போனது?
6. கலயெத் என்றால்?
7. தெபொரால் மரித்து எங்கு அடக்கம் பண்ணப்பட்டாள்?
   அந்த இடத்திற்கு என்ன பெயர்?
8. சிவப்பு நூல் கட்டியவன் யார்?
9. பீறுகிற ஓநாய் யார்?
10. யார் எலும்புகளை எடுத்துச் செல்ல வேண்டும்?


இதற்கான விடையை 15 ஆம் தேதிக்குள் ஆயர் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். **e-mail : tamilchurchcsisharjah@gmail.com**

# The Lord Empowers Me!

Have you ever tried to ride a bicycle without anyone holding you? At first, it feels scary. Your legs shake, the bike wobbles, and you think you might fall. But then someone-maybe your dad, mom, or a friend-runs beside you, holding the seat and cheering you on. Suddenly, you feel braver, stronger, and able to ride. That is what it means to be empowered-to be given the strength and courage you need.




The Bible tells us that God is the One who empowers us. In Isaiah 40:29 it says, "He gives strength to the weary and increases the power of the weak." This means that when we feel small, tired, or not good enough, God steps in to give us His strength.



Think about David, the young shepherd boy. On his own, he was too small to fight the giant Goliath. But David believed that the Lord was with him, and with God's power, he won the battle with just a stone and a sling! (1 Samuel 17).

Or think about the disciples of Jesus. They were ordinary men-fishermen, tax collectors, and workers. But when Jesus gave them the Holy Spirit, they became bold and went out to preach, heal, and change the world. They were empowered by God!




We too can live with this power every day. When you are nervous about a test, when you feel shy about speaking up, or when you find it hard to do the right thing, remember: God is your strength. Pray and ask Him to fill you with courage, wisdom, and love.

So next time you feel weak or unsure, whisper this truth: **"The Lord empowers me!" With Him, nothing is impossible.**

*Memory Verse :*

"I can do all things through Christ who strengthens me." Philippians 4:13

# Coloring Page



The Lord Empoweres Me!

*Contributed By*
**Sathish Rajkumar**

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this Month. +971 50 703 2150

# Birthday & Wedding day Celebrants

**1st Sep**
MISS. JERSA RAIYAR
MR. PAUL RAJ RAJA K.

**2nd Sep**
MR. SAM RAJ JUDSON

**3rd Sep**
MR. GODGIL ROBINSON
MISS. ANGELA RHEA
MISS. CLAIRE JUDITH

**4th Sep**
MASTER. EDRICK RAJ

**5th Sep**
MASTER. MELVIN HRIDAY NATHANIEL
MRS. J.N.BASIL SHALLU

**6th Sep**
MRS. VESLIN JEYASELVAN

**7th Sep**
MASTER. JABEZ VAS C.
MISS. DORITA PEARLYN DANIEL

**8th Sep**
MASTER. NANDHU PRASAD
MR. PRAVEEN JEBAKAR
MR. VIGNESH

**9th Sep**
MASTER. RALPH SAMUEL GNANAKKAN
MASTER. PRAVIN
MISS. JESSICA
MR. JEYASELVAN

**10th Sep**
MR. PRAJEETH EMANUEL VETHANAYAGAM
MISS. DAFINA JEZIAH
MR. JEEVAN JEFRIN

**12th Sep**
MASTER. JEREMIAH RASU
MRS. FELISHA JANE
MRS. SHINY SELVARANI WESLEY
MASTER. J.A.ADRIAN SAMUEL

**13th Sep**
MRS. PRIYA DARSINI LIGHTEN
MISS. JENSA

**14th Sep**
MR. DAVID ARUN D.
MASTER. ACHASH JESHUA

**15th Sep**
MR. STEPHEN PACKIARAJ

**16th Sep**
MR. PETER VETHANAYAGAM
MASTER. TITUS ISAIAH ABRAHAM
MASTER. FELIX G.
MASTER. JOHAN SOLOMON
MR. ANBU SUNDAR RAJ

**17th Sep**
MISS. JESLIN GETHSI
MRS. NANCY PRIYADHARSHINI
MR. ANTONY LAMBERT DINAKARAN
MR. SAMUEL FRANKLIN
I.MARIYAM

**18th Sep**
MR. CHRISTOPHER BENJAMIN BOSWELL E.
MASTER. JERSEN SAMUELRAJ
MRS. ESTHER JOYCE
MRS. PRINCY BEULAH
MISS. ANDREA ELIZABETH

**19th Sep**
MR. ROBERT PONSINGH T.

**20th Sep**
MR. STANLEY C.J. DANIEL
MR. EBANAZER.V
MASTER. KEVIN JOHN
MR. J.JOHN BRIGHT SINGH

**21st Sep**
MR. PRINCE RAJKUMAR D. Y.
MASTER. JELBERT
MR. JEBA RAVEENDRAN

**26th Sep**
MR. MOHANDAS SATHIYARAJ
MRS. SUNI SMILA J.
**27th Sep**
MR. JEBASINGH.P
**28th Sep**
MRS. RITA JABA VASITAI
MRS. SHALINI
MRS. ANCY RAJLIN
**29th Sep**
MR. SOLOMON DANIEL
**30th Sep**
MISS. SHANTHINI THANIGESH T.

## Wedding Anniversary

**1st Sep**
MR. JEYAKUMAR SOLOMON S. & MRS. SHEEBA JEYAKUMAR
**3rd Sep**
MR. SURESH BABU P. & MRS. SUMATHI
**7th Sep**
MR. ROBERT PONSINGH T. & MRS. BABITHA ROBERT
**14th Sep**
MR. DANIEL NARGUNAM & MRS. RAMYA S.
**15th Sep**
MR. JEBASINGH & MRS. JEMI POORANI
MR. RAJESH MANIRAJ & MRS. JEBA SABTHIKA
**16th Sep**
MR. ALEX VIVIN ARUMAINAYAGAM & MRS. P.HEPHZIBAH CHRISTABEL
**17th Sep**
MR. JEFFERY & MRS. ARCHANA
**19th Sep**
MR. STEVEN SARAVANAN
MR. RICHARD SATHISH KUMAR & MRS. JUDITH BLESSY BERNICA
**25th Sep**
MR. ASHOK KUMAR.D & MRS. ESTHER KALA.A
MR. JEBASINGH.P & MRS. MARYJAH BEAULH D

# DAILY BIBLE READING SEPTEMBER 2025

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 Mon | நியாதிபதிகள் 6 : 1-14 | சங்கீதம் 27 |
| 02 Tue | நியாதிபதிகள் 6 : 14-27 | சங்கீதம் 5 |
| 03 Wed | நியாதிபதிகள் 6 : 28-40 | சங்கீதம் 115 |
| 04 Thu | நெகேமியா 8 : 1 -8 | சங்கீதம் 30 |
| 05 Fri | அப்போஸ்தலர் 18 : 1-28 | சங்கீதம் 118 : 1-29 |
| 06 Sat | நியாதிபதிகள் 7 : 1 -14 | சங்கீதம் 119 : 41-48 |
| 07 Sun | மத்தேயு 5 : 1 -12 | சங்கீதம் 103 : 1-10 |
| 08 Mon | நியாதிபதிகள் 7 : 15- 25 | சங்கீதம் 104 : 1-35 |
| 09 Tue | நியாதிபதிகள் 8 : 1 -12 | சங்கீதம் 8 |
| 10 Wed | நியாதிபதிகள் 8 : 13- 35 | சங்கீதம் 6 |
| 11 Thu | 2 இராஜாக்கள் 11 : 1-1-13 | சங்கீதம் 43 |
| 12 Fri | ரோமர் 16 : 1 -7 | சங்கீதம் 32 |
| 13 Sat | நியாதிபதிகள் 4 : 1-10 | சங்கீதம் 128 |
| 14 Sun | மத்தேயு 27 : 15-24 | சங்கீதம் 125 |
| 15 Mon | நியாதிபதிகள் 4 : 11-24 | சங்கீதம் 113 |
| 16 Tue | நியாதிபதிகள் 5 : 1-15 | சங்கீதம் 92 |
| 17 Wed | நியாதிபதிகள் 5 : 16-31 | சங்கீதம் 16 |
| 18 Thu | ஆமோஸ் 9 : 1-12 | சங்கீதம் 29 |
| 19 Fri | ரோமர் 2 : 1-29 | சங்கீதம் 19 : 1-14 |
| 20 Sat | நியாதிபதிகள் 13 : 1-16 | சங்கீதம் 66 |
| 21 Sun | யோவான் 10 : 1-18 | சங்கீதம் 47 |
| 22 Mon | நியாதிபதிகள் 13 : 16-25 | சங்கீதம் 119 : 89-96 |
| 23 Tue | யாத்திரகமம் 4 : 1-31 | சங்கீதம் 105: 1-11 |
| 24 Wed | 1 கொரிந்தியர் 3 : 1-15 | சங்கீதம் 14 |
| 25 Thu | ஆதியாகமம் 46 : 1-34 | சங்கீதம் 107 : 31-43 |
| 26 Fri | 1 திமொத்தேயு 5 : 1-10 | சங்கீதம் 28 |
| 27 Sat | யோவான் 17 : 1-23 | சங்கீதம் 21 |
| 28 Sun | லூக்கா 2 : 25-35 | சங்கீதம் 97 |
| 29 Mon | நியாதிபதிகள் 14 : 1-20 | சங்கீதம் 148 |
| 30 Tue | நியாதிபதிகள் 15 : 1-20 | சங்கீதம் 34 : 1-22 |

# ஆராதனை தியானப் பொருள்

## செப்டம்பர்- 2025

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>Sep-7<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | நெகேமியா 8:1- 8<br>அப்போஸ்தலர் 18:24-28<br>மத்தேயு 5:1-12<br>சங்கீதம் 119:41-48 | Education Sunday<br>கல்விப்பணி : திருச்சபையின் திருப்பணி<br>Education as a ministry of the Church |
| ஞாயிறு<br>Sep-14<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | 2 இராஜக்கள் 11 : 1- 3<br>ரோமர் 16 : 1-7<br>மத்தேயு 27 : 15-24<br>சங்கீதம் 82 | Women's Sunday<br>பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் உமது அரசு வருக<br>Let your kingdom come to ensure gender equality |
| ஞாயிறு<br>Sep-21<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஆமோஸ் 9 : 1-12<br>ரோமர் 2 : 17-29<br>யோவான் 10 : 14-18<br>சங்கீதம் 66 | கடவுளும் பல்சமய மக்களும்<br>God and people of all faith |
| ஞாயிறு<br>Sep-28<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 46 : 28-34<br>1 திமொத்தேயு 5: 1-10<br>லூக்கா 2 : 25-35<br>சங்கீதம் 21 | Senior Citizen's Sunday<br>முதியோரை பேணுதலும் ஏற்றுக்கொள்ளலும்<br>Ordained Ministry: Fragrance |